Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | |
|---|---|---|
| Calendar .. .. | } | |
| Miscellaneous .. .. | } | |
| Preliminary Register .. .. | } | **S.C. 55/2023** |
| Sessions .. .. | } | |
| | } | Prosecution – **PW5** |
| Deposition of witness for | } | Defence – |
| | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | டாக்டர் கிருஷ்ணவேணி |
| Husband Name | : | ஆனந்தன் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | மருத்துவர் |
| Age | : | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.03.2026.

<u>(எதிரிகள் ஆஜர்.)</u>

**முதன்மை விசாரணை:–**

நான் தற்போது மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் மகப்பேறு துறையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.05.2013 அன்று நான் திருவாடானை அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது ஆர்எஸ்மங்களம் காவல் நிலைய காவலர் 1253 தேவேந்திரன் என்பவர் குற்ற எண்.46/2013 பிரிவுகள் 147, 306 இதச வழக்கில் இறந்துபோன பொக்கார் வயது 53, த/பெ.மங்காளை, அண்ணாமலை நகர் என்பவரின் பிரேதத்தை அடையாளம் காட்டினார். ஆய்வாளர் வேண்டுகோளுக்கிணங்க நான் அன்று காலை 12.30 மணிக்கு பிரேத பரிசோதனையை தொடங்கினேன். அவருக்கு வெளிக்காயங்கள் எதுவும் இல்லை. மூக்கில் இரத்தம் நுரைதள்ளியநிலையில் இருந்தது. அவரது நாவடி எலும்பு

சீராக இருந்தது. நுரையீரல் சீராக இருந்தது. மண்ணீரல், கல்லீரம், சிறுநீரகங்கள் ரத்த செறிவுடன் காணப்பட்டது. வயிற்று பகுதியை திறந்து பார்த்தபோது இரத்தம் கருப்பு நிறத்தில் இருந்தது. சிறுகுடலில் சளிபோன்ற திரவம் காணப்பட்டது. ஆண்உறுப்பு சீராக இருந்தது. முதுகுதண்டுவடம் மற்றும் நெஞ்சு எலும்புகள் சீராக எலும்பு முறிவின்றி காணப்பட்டது. மூளை சீராக இருந்தது. உடல் உள்ளுறுப்புகள் சேகரிக்கப்பட்டு இரசாயன பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது. இரசாயன பகுப்பாய்வு அறிக்கையின்படி இறந்த நபர் ஆர்கனோபாஸ்பரஸ் உட்கொண்டிருந்ததாக தெரியவந்தது. எனவே அவர் விஷத்தன்மை கொண்ட ஆர்கனோபாஸ்பரஸ் உட்கொண்டதால் இருதய செயலிழப்பு ஏற்பட்டு இறந்திருக்கலாம் என எனது இறுதி கருத்தை வழங்கினேன். நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.1**, இறுதி அறிக்கை **அ.சா.ஆ.2**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

என்னுடைய இறுதி அறிக்கையில் பிரேத பரிசோதனைக்கு முன்பு எவ்வளவு காலத்திற்கு முன்பாக இறந்திருக்கலாம் என்பதை தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.